R 5498 (page 213)

# அபிஷேகம் பண்ணுதல் - ஸ்திரப்படுத்துதல் - முத்திரித்தல்

## ANOINTED - ESTABLISHED – SEALED

"உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து .." - 2 கொரிந்தியர் 1:21,22.

அப்போஸ்தலர் இங்கு கொரிந்துவிலுள்ள சபைக்கு முகவரியிட்டு எழுதுகிறார். அந்த சபையின் அங்கங்கள் அவருடன் உடன் வேலையாட்களாக இருக்கிறார்கள். அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் அங்கங்களாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்று அங்கீகரிக்கிறார். முன் கூட்டியே தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டபடி, கிறிஸ்து அவருடைய குணமாக்கும், போதிக்கும், உதவும், உயர்த்தும் வேலையினால் உலகத்தை ஆசீர்வதிக்கிற நிஜமான தீர்க்கதரிசியாக, நிஜமான ஆசாரியராக, நிஜமான இராஜாவாக இருக்கிறார். அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்திற்குள் நம்மைக் கொண்டுவந்து, நம்மை அமைத்து அல்லது ஸ்திரப்படுத்துகிறவர் தேவனே என்று கூறுகிறார். தம்மிடம் வருபவர்களுக்கான அழைப்பை தேவனே தருகிறார் என்பதை இது சுட்டிக் காண்பிக்கிறது. முந்தைய அழைப்பு அங்கு இருந்ததை இது சுட்டிக் காண்பிக்கிறது, அந்த கனத்தை எந்த மனிதனும் தனக்குத்தானே எடுத்துக் கொள்வதில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இயேசுவும்கூட ஒரு ஆசாரியராக, ஒரு இராஜாவாக இருக்கிறதற்கான கனத்தை அவரே எடுத்துக் கொண்டிருக்க முடியாது. நான் ஒரு ஆசாரியராக இருப்பேன், ஒரு இராஜாவாக இருப்பேன் என்று அவரால் சொல்லமுடியாது.

இந்த சபையின் மீது அல்லது சரீரத்தின் மீது மாபெரும் தலையாயிருப்பதற்கு தேவன் இயேசுவை அழைத்ததுபோல, இயேசுவின் மூலமாக சபையினுடைய அங்கத்தினராக ஆவதற்காக, தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் நிபந்தனைகளுக்கு இணக்கமாயிருந்து நம் மாபெரும் பரிந்துபேசுபவர் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தில் பொருத்தப்படுகிறோம். அது தானாக நடப்பதில்லை, மாறாக நாம் நிலைநிறுத்தப்படுகிறோம். சில உண்மையற்ற தன்மையினால், இந்த நிலைமையில் நாம் தொடராவிட்டால், நாம் அழிக்கப்படுவோம், மேலும் நமக்கு பொருத்தமானதாக இருந்த கிரீடம் எடுத்துப் போடப்படும்.

நம்மைப் பொருத்தி, நிலைநிறுத்தி, பரிசுத்த ஆவியினால் நம்மை அபிஷேகம் செய்து, இப்படியாக இந்த பரிசுத்த கூட்டத்தின் அங்கத்தினராக ஏற்படுத்தினவர் பரலோகப் பிதாவாகிய நம் தேவனே. நம்மை நிலைநிறுத்த அபிஷேகம் செய்வது நம் மீட்பரின் எல்லைக்குட்பட்டதும் அல்ல. அப்போஸ்தலர் சொல்வதைப்போல, "தேவனே தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்". சகலமும் தேவனுடையது. சகலமும் குமாரன் மூலமாக உண்டானது. இதனால் நாம் பெற்றுள்ள இந்த அபிஷேகமும் பிதாவினிடத்திலிருந்து வருகிறது. இருந்த போதிலும் அதன் வாய்க்காலாக கர்த்தர் இயேசுவே இருக்கிறார். பிதா இயேசுவுக்குக் கொடுத்த இந்த பரிசுத்த ஆவியை, அவர் நம் மீது பொழிந்தருளியுள்ளார். பிதா அதை அங்கீகரித்திருக்கிறார், குமாரன் அதை ஊற்றுகிறார்.

## ஆண்டவரின் சாயலில் முத்திரிக்கப்படுதல்

மேலும் தேவனே "நம்மை முத்திரித்தும் இருக்கிறார்". நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, சரீரத்தில் பொருத்தப்படுவது மட்டும் முக்கியமல்ல, மாறாக நாம் முத்திரிக்கப்படுவது அல்லது பொறிக்கப்படுவது என்பது மற்றொரு விலையேறப்பெற்ற கருத்தாயிருக்கிறது. நாம் ஒரு முத்திரையைப் பெற வேண்டும். மெழுகுக்குள் முத்திரை பதிக்கவேண்டுமானால், அந்த மெழுகை உருக்கி அதன் முத்திரை சாயலை வருவிப்பது போல, தேவ சித்தத்தை அறியவும் செய்யவும் விருப்பமாயிருக்கிற நம்மிடையேயும் அவ்வாறே இருக்கிறது. நம் பிரியமான ஆண்டவரின் சாயலுக்குள் அவரது பரிசுத்த ஆவியினால் நாம் முத்திரையிடப்படுகிறோம். மேலும் நாம் முத்திரிக்கப்படுதலின் வாய்க்காலாக சத்தியம் இருக்கிறது.

எனவே பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்பட்டவர்கள் சத்தியத்தை மதித்துணர்ந்து போற்றுவதை ஒரு குறிப்பிட்ட அளவு பெற்றிருக்கிறார்கள். சகல வாக்குத்தத்தங்களும் தேவனுடைய வார்த்தையின் மூலம் வருகிறது. தற்போது கிரியை செய்கிற வல்லமையாக இதுவே இருக்கிறது. எனவே உலகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருக்கிற சகல தேவ ஜனங்களும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மூலமாக முத்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார். ஏனென்றால் அது அவருடைய வாக்குத்தத்தங்களினால் வருகிறபடியால், இந்த முத்திரித்தல் பிதாவினுடையதாயிருக்கிறது. **[R5499 : page 213]** இது சபையின் தலையாயிருக்கிற நம் கர்த்தராகிய இயேசுவின் வழிகாட்டுதலின் கீழும், பராமரிப்பின் கீழும் இருக்கிறது. அவர் ஏற்ற சமயத்தில் நம்மை குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தேவன் முன்பாக நிறுத்துவார்.

ஓ கர்த்தாவே; உமது சாயலில் நான் இருந்தால், விழித்திருந்து, உம்முடைய தூய்மையான சாயலை பிரகாசிக்கக்கூடும் மாம்சத்தின் கட்டுக்களை என்னால் உடைக்க முடியும் போது, அப்போது, நான் திருப்தியாவேன், சுதந்திரமாய் இருப்பேன்.

-------------------